**ஜூலை – 30**

# TNPSC துளிகள்

- நைஜீரியாவின் போகோ ஹராம் கிளர்ச்சியாளர்கள் ஒரு தீவிரவாதத் தாக்குதலை நடத்தி 65 மக்களைக் கொன்றுள்ளார்கள் என்று சந்தேகிக்கப் படுகின்றது.
- குரல் வாக்கெடுப்பின் மூலம் நம்பிக்கை வாக்கெடுப்பில் கர்நாடகாவின் புதிய முதல்வர் BS எடியூரப்பா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அம்மாநிலச் சட்டசபையின் சபாநாயகர் K.R. இரமேஷ் குமார் தனது பதவி விலகலை அறிவித்துள்ளார்.
    - இவர் தனது பதவி விலகல் கடிதத்தை அம்மாநில சட்டசபையின் துணை சபாநாயகரான கிருஷ்ணா ரெட்டியிடம் அளித்துள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## கொடைக்கானல் மலைப் பூண்டு


- புவிசார் குறியீட்டுப் பதிவுத் துறையானது கொடைக்கானல் மலைப் பூண்டிற்கு புவிசார் குறியீட்டு அடையாளத்தை வழங்கியுள்ளது.



- இந்தப் பூண்டு வகையானது, தனது மருத்துவ மற்றும் பாதுகாப்புப் பண்புகளுக்காகப் பெரிதும் அறியப்படுகின்றது.
- இது பெரும்பாலும் வெள்ளை அல்லது வெளிறிய மஞ்சள் நிறத்தைக் கொண்டுள்ளது.
- உயரமான மலை, மூடுபனி சார்ந்த நிலை மற்றும் கொடைக்கானல் மண் ஆகியவை அதன் மருத்துவப் பண்புகள் மற்றும் கெடாமல் நீண்ட நாட்கள் சேமித்து வைத்துப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்குக் காரணமாகின்றன.
- தமிழ்நாட்டில் பூண்டானது காரிப் பயிர் (ஜுன் – ஜூலை) மற்றும் ராபிப் பயிர் (அக்டோபர் – நவம்பர்) வகையாக இருக்கின்றது.

## தமிழ்நாடு மருத்துவமனைகள் தினம் – ஜூலை 30


- தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகள் ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் பிறந்த தினமான ஜூலை 30 ஆம் தேதியை "மருத்துவமனை தினமாக" அனுசரிக்கவிருக்கின்றன.
- புதுக்கோட்டையைச் சேர்ந்த இவர் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டின் புகழ்பெற்ற பெண் மருத்துவர்களில் ஒருவராக விளங்கினார். இவர் தமிழ்நாடு மாநிலத்தின் முதலாவது பெண் சட்டசபை உறுப்பினர் ஆவார்.
- மேலும் இவர் 1954 ஆம் ஆண்டில் சென்னை அடையாறு புற்றுநோய் மையத்தையும் நிறுவியுள்ளார்.
- பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமை நிதிகளை அளிக்கும் அரசு சாரா நிறுவனங்கள், நன்கொடையாளர்கள், சமுக அமைப்புகள் மற்றும் பெரு நிறுவனங்களைப் பாராட்டுவதோடு மருத்துவமனைகளால் வழங்கப்படும் சேவைகளை விளம்பரப் படுத்துவதற்காகவும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- 1956 ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு பத்ம பூசண் விருது வழங்கி கௌரவித்தது.
- இவருடைய புத்தகம் : சட்டமன்ற உறுப்பினராக எனது அனுபவங்கள்.
- தேவதாசி முறையை ஒழிக்கும் சட்டத்தின் பின்னணியில் இருந்த முக்கியமான நபர் இவராவார். (மசோதா அறிமுகப்படுத்தப் பட்டது 1930 ஆம் ஆண்டில் – மசோதா நிறைவேற்றப் பட்டது 1947 ஆம் ஆண்டில்)




# தேசியச் செய்திகள்

## புலிகள் – கணக்கெடுப்பு, பாதுகாப்பு மற்றும் காப்பகங்கள்

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 29 அன்று சர்வதேசப் புலிகள் தினம் அனுசரிக்கப்பட்டது.
- இக்கொண்டாட்டத்தின் போது, இந்தியாவில் நான்காவது புலிகள் கணக்கெடுப்பு முடிவுகள் வெளியிடப்பட்டன.
- இந்த ஆய்வானது, இந்திய வனவிலங்கு நிறுவனத்தினால் (WWI - Wildlife Institute of India) மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**The big cat count**

The table shows the tiger population in India since the first tiger census in 2006. The Central India and Eastern Ghats landscape has seen the highest increase in tiger population since the 2014 cycle


| Landscape | 2006 | 2010 | 2014 | 2018 |
|---|---|---|---|---|
| Shivalik Hills and Gangetic Plains | 297 | 353 | 485 | 646 |
| Central India and Eastern Ghats | 601 | 601 | 688 | 1,033 |
| Western Ghats | 402 | 534 | 776 | 981 |
| North East Hills and Brahmaputra | 100 | 148 | 201 | 219 |
| Sundarbans | NA | 70 | 76 | 88 |

3.81 lakh sq. km. – Forests surveyed for tiger signs | 5.23 Lakh km – Foot surveys | 5.94 lakh – Man-days effort | 76,651 Photographs of tigers


While tiger occupancy has increased in Madhya Pradesh and Andhra Pradesh, it has seen a sharp decline in Chhattisgarh since 2014 and has stagnated for Odisha

Prime Minister Narendra Modi, with Ministers Prakash Javadekar and Babul Supriyo, at the release of the results of 4th cycle of All India Tiger Estimation in New Delhi. - PTI

- இந்தியா ஒட்டுமொத்தமாக 2967 புலிகளைக் கொண்டுள்ளது என்று இந்த அறிக்கை கூறுகின்றது.
- முதலாவது புலிகள் கணக்கெடுப்பு 2006 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- தற்பொழுது இந்த ஆய்வு 4 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது.




- மத்தியப் பிரதேசம் மிக அதிக அளவிலாக 526 புலிகளைக் கொண்டுள்ளது. இதற்கு அடுத்து கர்நாடகா (524) மற்றும் உத்தரகாண்ட் (442) ஆகிய மாநிலங்கள் அதிக புலிகளைக் கொண்டுள்ளன.
- சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் புலிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சியைக் கண்டுள்ளன.




- ❖ மத்தியப் பிரதேசத்தில் உள்ள பென்ச் புலிகள் காப்பகம் அதிக எண்ணிக்கையிலான புலிகளைக் கொண்டுள்ளது.
- ❖ "Tx2" என்ற ஒரு திட்டமானது 2010 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெற்ற செயிண்ட் பீட்டர்ஸ்பெர்க் புலிகள் மாநாட்டின் போது உலக வனவிலங்கு அமைப்பினால் (World Wildlife Foundation - WWF) தொடங்கப்பட்டது.
- ❖ இதன்கீழ், புலிகளைக் கொண்டு இருக்கும் 13 நாடுகள் 2022 ஆம் ஆண்டில் புலிகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- ❖ உலக வனவிலங்கு அமைப்பின் "Tx2" என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக தனது புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக்கிய உலகின் முதலாவது நாடு நேபாளம் ஆகும்.

***தமிழ்நாடு புள்ளி விபரங்கள்***

- ❖ தமிழ்நாட்டில் உள்ள 4 புலிகள் காப்பகங்களும் இந்தக் கணக்கெடுப்பில் "மிகவும் சிறந்ததாக" தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. அவையாவன
    - முதுமலை புலிகள் காப்பகம்
    - ஆனைமலை புலிகள் காப்பகம்
    - சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் (STR)
    - களக்காடு - முண்டந்துறை புலிகள் காப்பகம்
- ❖ தமிழ்நாட்டில் உள்ள STR ஆனது 2014 ஆம் ஆண்டு முதல் "மிகப் பெரிய அளவிலான முன்னேற்றத்தைப்" பதிவு செய்துள்ளது. இங்கு 2014 ஆம் ஆண்டு முதல் புலிகளின் எண்ணிக்கை 30 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- ❖ நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் புலிகள் கணக்கெடுப்பில் STR-ல் புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பிற்காக இதற்குப் பிரதம அமைச்சரால் விருது வழங்கப்பட்டது.
- ❖ மேலும் பின்வருவனவற்றை இணைத்து தமிழ்நாட்டில் 5-வது புலிகள் காப்பகத்தை அமைப்பதற்குப் பரிந்துரைக்க செய்யப்படுகின்றது.

- தேனி மாவட்டத்தில் உள்ள மேகமலை வனவிலங்கு சரணாலயம்
- விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் நரைத்த அணில் வனவிலங்கு சரணாலயம்.




| | 2006 | 2010 | 2014 | 2018 |
|---|---|---|---|---|
| Tamil Nadu | 76 (56-95) | 163 (153-173) | 229 (201-253) | 264 (227- 302) |
| Western Ghats | 402 (336-487) | 534 (500-568) | 776 (685-861) | 981 (871 - 1,093) |

*(Numbers in brackets indicates lower and upper limits)*
*Source: Status of Tigers In India 2018*

## ஒடிசா ரசகுல்லா

- ஒடிசாவின் ரசகுல்லாவிற்குப் புவிசார் குறியீடு (geographical indication - GI) வழங்கப் பட்டுள்ளது.
- ஒடிசா சிறு தொழிற்சாலைகள் கழகமானது ஒடிசா ரசகுல்லாவைப் புவிசார் குறியீட்டிற்காகப் பதிவு செய்து, அதனைச் சொந்தம் கொண்டாடும் நிறுவனமாக விளங்கும்.
- இது ரசகுல்லாவிற்குத் தேவையான அனைத்து சட்டப்பூர்வ மற்றும் அறிவுசார் சொத்துரிமையைப் பெற்று விளங்கும்.
- ஒடிசாவில் உள்ள அனைத்து 30 மாவட்டங்களும் புவிசார் குறியீட்டைப் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள புவியியல் பகுதிகள் என வரையறுக்கப்பட்டுள்ளன.
- ஒடிசா ரசகுல்லாவானது உலகப் புகழ்பெற்ற பூரி ஜெகந்நாத் ஆலயச் சடங்குகளுடன் தொடர்புடையது.

## ஒருங்கிணைக்கப்பட்ட போர்ப் படைகள்

- முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட போர்ப் படைகள் (Integrated Battle Groups - IBGs) என்ற கருத்தானது விரைவில் செயல்படுத்தப்படும் என்று இந்திய இராணுவம் அறிவித்துள்ளது. இது அடுத்த மாதத்தின் இறுதியில் அமைக்கப் படவிருக்கின்றது.
- IBGகள் படைப்பிரிவு அளவிலான, சுறுசுறுப்பான, தன்னிறைவு பெற்ற போர் அமைப்புகளாகும். இது போரின் போது எதிரி இராணுவத்திற்கு எதிராக தாக்குதல்களைத் தொடங்கும்.
- பொதுவாக 1500 முதல் 4000 இராணுவ வீரர்கள் சேர்ந்து ஒரு படைப் பிரிவில் இருப்பர்.
- IBG ஆனது பாதுகாப்பு மற்றும் தாக்குதல் படையாகச் செயல்படும்.

- தாக்குதல் நடத்தும் IBGகள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய இடங்கள் அல்லது எதிரிப் படைகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்ற பகுதிகள் ஆகிய பகுதிகளில் செயல்படும்.

## புகழ்பெற்ற சுற்றுலாத் தளங்கள்

- நாட்டில் உள்ள "புகழ்பெற்ற 17 சுற்றுலாத் தளங்கள் அரசாங்கத்தினால்" உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தளங்களாக மேம்படுத்தப் படவிருக்கின்றன. இவைகள் இதர சுற்றுலாத் தளங்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்படவிருக்கின்றன.
- இந்த முன்னெடுப்பு இந்தியாவின் மென்சக்தி ஆற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 2019 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- தளங்களின் பட்டியல் பின்வருமாறு:

Taj Mahal and Fatehpur Sikri (Uttar Pradesh), Ajanta & Ellora (Maharashtra), Humayun's Tomb, Red Fort and Qutub Minar (Delhi), Colva (Goa), Amer Fort (Rajasthan), Somnath and Dholavira (Gujarat), Khajuraho (Madhya Pradesh), Hampi (Karnataka), Mahabalipuram (Tamil Nadu), Kaziranga (Assam), Kumarakom (Kerala) and the Mahabodhi Temple (Bihar).

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேசப் புகையிலைப் பரவல்

- உலக சுகாதார அமைப்பானது சர்வதேசப் புகையிலைப் பரவல் மீதான தனது 7-வது அறிக்கையை வெளியிட்டுள்ளது. இது புகையிலையின் தேவையைக் குறைப்பதற்காக உலக நாடுகள் எடுத்துள்ள தேசிய முயற்சிகளை ஆய்வு செய்கின்றது.
- தற்பொழுது ஏறத்தாழ 1.1 பில்லியன் புகைபிடிப்பவர்கள் உள்ளனர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 80 சதவிகித நபர்கள் குறைந்த வருமானம் கொண்ட மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இருக்கின்றனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## 7-வது பொருளாதாரக் கணக்கெடுப்பு

- மத்திய அரசு திரிபுரா மாநிலத்திலிருந்து 7-வது பொருளாதாரக் கணக்கெடுப்பைத் தொடங்கியிருக்கின்றது.
- இந்தக் கணக்கெடுப்பு மற்ற மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தொடங்கப்படவிருக்கின்றன.

- பொருளாதாரக் கணக்கெடுப்பு (Economic Census - EC) என்பது நாட்டின் புவியில் எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து நிறுவனங்கள்/அலகுகளின் மொத்த எண்ணிக்கையாகும்.
- நாட்டில் உள்ள மிகப்பெரிய அளவிலான முறை சாராத் துறை குறித்த தகவலைக் கொண்ட ஒரே ஆதாரம் இதுவாகும்.
- பொருளாதாரக் கணக்கெடுப்பில் வேளாண்மைத் துறை இணைக்கப்படவில்லை.
- இந்தக் கணக்கெடுப்பானது மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்டச் செயல்படுத்துதல் துறை அமைச்சகத்தினால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- தற்பொழுது வரை 6 பொருளாதாரக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. அவையாவன :
  - முதலாவது EC (1977), இரண்டாவது EC (1980), மூன்றாவது EC (1990), நான்காவது EC (1988), ஐந்தாவது EC (2005), ஆறாவது EC (2013).

## உலக இந்துப் பொருளாதார மன்றம்

- உலக இந்துப் பொருளாதார மன்றமானது (World Hindu Economic Forum - WHEF) இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையேப் பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிப்பதற்காகவும் தனது பொருளாதார வாய்ப்புகளுக்காக உலக அமைப்புடன் நேபாளத்தை இணைப்பதற்காகவும் தனது நேபாளப் பிரிவைத் தொடங்கியுள்ளது.
- WHEF ஆனது 2012 ஆம் ஆண்டில் ஹாங்காங்கில் தொடங்கப்பட்டது.
- இது வலிமையான பொருளாதார வல்லுநர்கள், கல்வியாளர்கள், தொழிற்துறை வல்லுநர்கள், வர்த்தகர்கள், வங்கியாளர்கள், தொழில்சார் வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்களின் குழுவாகும்.
- இதன் தத்துவம் “பொருளாதாரமே வலிமை வாய்ந்தது” (தர்மாஸ்யா மூலம் - அர்தாஹ் - அர்த்த சாஸ்திரம்) என்பதாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஏஜெண்ட் ஸ்மித் மால்வேர்

- இந்திய இணைய வழிக் குற்றத் தடுப்பு அதிகாரிகளின் அறிக்கையின்படி, சமீபத்தில் கண்டறியப்பட்ட ஏஜெண்ட் ஸ்மித் மால்வேரினால் (தரவுகளைத் திருடுவது) இந்தியர்கள் அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இந்த மால்வேர் ஆண்ட்ராய்டு கைபேசிகளில் உள்ள செயலிகளைப் பயனாளிகளின் அனுமதி இல்லாமல் “தீங்கிழைக்கக் கூடிய தரவுகளாக” மாற்றும் திறன் கொண்டது.
- ஏஜெண்ட் ஸ்மித் ஆனது கூகுள் ப்ளே ஸ்டோரில் உள்ள செயலிகளில் இருக்கும். இது பெரும்பாலும் விளையாட்டு, படங்களைத் திருத்தம் செய்தல் மற்றும் பொழுதுபோக்கு செயலிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இமயமலை மாநாடு

- உத்தரகண்டில் உள்ள முசோரியில் இமயமலை மாநாடு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
- இது இமயமலையில் உள்ள மாநிலங்களின் வளர்ச்சி தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை விவாதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மாநாட்டின் முக்கியமான குறிக்கோள் இமயமலை சூழலமைப்பைப் பாதுகாத்தல், பல்லுயிர்ப் பெருக்கம், கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் நீர்ப் பாதுகாப்பு ஆகியவையாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## அஞ்சும் மோட்கில் - துப்பாக்கி சுடுதலில் சாதனை

- உலக சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப் பதக்கம் வென்ற அஞ்சும் மோட்கில் 10மீ ஏர் ரைபிள் பிரிவில் 253.9 புள்ளிகளைப் பெற்றார். இதற்கு முன் பெண்களுக்கான 10மீ ஏர் ரைபிள் பிரிவில் இவருடைய இணை வீராங்கனையான அபூர்வி சண்டேலா (252.9 புள்ளிகள்) நிகழ்த்திய சாதனையை இவர் முறியடித்தார்.
- புது தில்லியில் நடைபெற்ற XII சர்தார் சஜன் சிங் சேத்தி நினைவு மாஸ்டர்ஸ் துப்பாக்கி சுடுதல் போட்டியின் போது இவர் இச்சாதனையை நிகழ்த்தினார்.
- 2020 ஆம் ஆண்டின் டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடுதலுக்கான ஒலிம்பிக் இடத்தைப் பிடித்த முதல் வீராங்கனைஅஞ்சும் ஆவார்.



---------------